புரட்சிப்
# பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • DECEMBER, 04 2025 • புரட்சி 25 • முழக்கம்(ISSUE) 49 • விலை(PRICE) ரூ.6.00

# ஜாதி ஒழிப்பு மாவீரர்களை நினைவில் ஏந்துவோம்!

## சட்ட எரிப்பு நாளில் எழுச்சிகரமான வீரவணக்க நிகழ்ச்சிகள்

அரசிலமைப்புச் சட்டத்தில் 25, 26, 13, 19, 368, 372(1) ஆகிய பிரிவுகள் ஜாதியைப் பாதுகாக்கும் விதமாக உள்ளது என்றும், அவற்றை நீக்க வேண்டுமென்றும் 03.11.1957 அன்று தஞ்சையில் நடைபெற்ற திராவிடர் கழக ஸ்பெசல் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றிய பெரியார், கோரிக்கைக்கு செவிசாய்க்க அரசுக்கு 30 நாட்கள் கெடு விதித்தார். ஆனால் கோரிக்கை குறித்து பரிசீலிக்க வேண்டிய அரசாங்கமோ, சட்டத்தை கொளுத்தினால் என்ன தண்டனை என்று வரையறுத்து மசோதாவை இயற்றி நிறைவேற்றியது. 3 மாதங்கள் முதல் 3 ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும் என்று சட்டமியற்றி அச்சுறுத்திய பின்பும், முதல் நாளே தந்தை பெரியாரை திருச்சியில் வைத்து கைது செய்த பின்பும், 26.11.1957-இல் நடைபெற்ற சட்ட எரிப்புப் போராட்டத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்று, நான்காயிரம் பேர் சிறைபுகுந்து, சிறைக்குள்ளேயும் விடுதலை ஆன ஒரு மாதத்தில் 18 பேர் உயிர் நீத்த வீரஞ்செறிந்த ஜாதி ஒழிப்புப் போராட்டம் இந்தியக் கண்டம் கண்டிராதது.

சிறைக்கொடுமைகள், சிறையில் இருந்து மீண்ட பின்பும் சந்தித்த இடர்பாடுகள், உயிரிழந்த ஜாதி ஒழிப்பு வீரர்களின் குடும்பங்கள் சந்தித்த இன்னல்கள் என சட்ட எரிப்புப் போராளிகள் ஒவ்வொரு வரலாறும் ஜாதி ஒழிப்பு களத்தில் நிற்கும் போராளிகளுக்கான வாழ்வியல் பாடங்கள். அறிவியல் வளர்ச்சியால் உருவான சமூக வலைதளங்களில் ஜாதியை உயர்த்திப் பிடிக்கும் சிந்தனைகளை விதைப்பது, ஜாதிய அடையாளத்தை வெட்கமின்றி பயன்படுத்திக்கொள்வது, வாட்ஸ் ஆப் குழுக்களில் ஜாதிய வலைப்பின்னலை வலுப்படுத்திக்கொள்வது என விதவிதமாக ஜாதியத்தை வளர்க்கிற முயற்சிகள் உருவாகியிருக்கும் இக்காலச்சூழலில், ஜாதிச்சங்கங்களை வீரியமிழக்கச் செய்து, ஜாதிய எண்ணவோட்டத்தில் இருந்து மக்களை விடுவித்து சமத்துவச் சூழலை உருவாக்கிட ஜாதி ஒழிப்புக்காக நடைபெற்ற தன்னிகரற்ற போராட்டமான சட்ட எரிப்புப் போராட்டத்தின் வரலாற்றை இன்றைய இளம் தலைமுறை அறிந்துகொள்ள வேண்டியது அவசியமானது. அத்தகைய முயற்சியாக, ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 26-ஆம் தேதி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், பல்வேறு மாவட்டங்களில் வீரவணக்க நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்த ஆண்டு நடைபெற்ற வீரவணக்க நிகழ்ச்சிகளின் செய்தித்தொகுப்பு.






**கோவை:** *ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை கொளுத்தி சிறைசென்ற போராளிகளுக்கும், சிறையில் உயிர் நீத்த போராளிகளுக்கும் 26.11.2025. அன்று கோவை மாநகர திராவிடர் கழகத்தின் மாநகரச் செயலாளர் வெங்கட் தலைமையில் காந்திபுரம் பெரியார் சிலை முன்பு வீரவணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்வில் மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம், மாநகர தலைவர் நிர்மல்குமார் உரையாற்றினர். கழகத் தோழர்கள் கிருஷ்ணன், மாதவன், நவீன், சதீஷ், தரணி, கிருஷ்ணமூர்த்தி, இராஜலட்சுமி கலந்து கொண்டனர்.*

**திருப்பூர்:** *மாவட்டக் கழகம் சார்பில் 26-11-2025 புதன்கிழமை காலை 10 மணி அளவில் புதிய பேருந்து நிலையம் அருகில் ஜாதியைப் பாதுகாக்கும் சட்டப் பிரிவுகளை கொளுத்தி உயிர் நீத்த தோழர்களுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வு நடைபெற்றது. சிறை வாசத்தால் உயிரிழந்த 18 ஜாதி ஒழிப்புப் போராளிகளின் பெயர் குறிப்பிட்டு வீரவணக்க முழக்கமிட்டு மரணமடைந்த வீரர்களின் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது. நிகழ்விற்கு திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் இராசு தலைமை வகித்தார். தோழர்கள் ஈழமாறன், கார்த்திக், வெங்கட், சிரிஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிவகாமி (தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர்), துரை.பரிமளரசன் (சமூக ஊடகப் பொறுப்பாளர் தி.வி.க.), பாரதி சுப்பராயன் (நவீன மனிதர்கள் குழு), ஏ.பி.ஆர். மூர்த்தி (மாவட்டச் செயலாளர், விசிக), விடுதலைச் செல்வன், (துணைப் பொதுச் செயலாளர் ஆதித்தமிழர் பேரவை), ஆதன் (தமிழ்நாடு மாணவர் கழகம்), கார்மேகம் (மக்கள் பாதுகாப்பு கூட்டமைப்பு), முத்து (மாநகர அமைப்பாளர், திவிக) ஆகியோர் கருத்துரையாற்றினர். கழகப் பொருளாளர் சு.துரைசாமி சிறப்புரையாற்றினார். மடத்துக்குளம் கணக்கன் நன்றியுரையாற்றினார். நிகழ்வில் துரை. வளவன் (துணை பொதுச்செயலாளர் விசிக),நீதிராசன் (மாவட்டச் செயலாளர் திவிக), மா.இராமசாமி (தெற்கு பகுதிச் செயலாளர், திவிக), வீ.தனபால் (மாநகரத் தலைவர், திவிக), சி.மாதவன் (மாநகரச் செயலாளர் திவிக), க.மாரிமுத்து (மாநகரத் துணைத் தலைவர், திவிக), அய்யப்பன் (வடக்கு ஒன்றிய அமைப்பாளர் திவிக), சு.சிவானந்தம் (மடத்துக்குளம் ஒன்றியச் செயலாளர்), மதன் (ஆத்துப்பாளையம் பொறுப்பாளர்) கணபதி, ராஜ்குமார் (நவீன மனிதர்கள் குழு), தோழர்கள் லெனின், அருண், கழகத் தோழர் ஆ.இனியன் உள்ளிட்ட திரளான தோழர்கள் கலந்து கொண்டனர்.*

**சென்னை:** *1957-இல் ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை எரித்து, சிறைசென்ற போராளிகளுக்கு வீரவணக்க நிகழ்வு, சென்னை ராயப்பேட்டை வெங்கடாசலம் தெருவில், 26.11.2025 மாலை 6 மணிக்கு, சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி தலைமையில் நடைபெற்றது. பெரியார் சிலைக்கு தோழர்கள் மாலை அணிவித்து கொள்கை முழக்கமிட்டனர். ஜாதி ஒழிப்புச் சுடரை தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் ஏற்றி வைத்தார். தோழர்கள் ஜாதி ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர், தமிழ்நாடு மாணவர் கழகத்தின் சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பேரன்பு ஜாதி ஒழிப்புப் பாடல்கள் பாடினார்.*






*ர.பிரகாசு (நிமிர்வோம் வாசகர் வட்ட அமைப்பாளர்), அருண் கோமதி (தாம்பரம் நகர அமைப்பாளர்) ஆகியோர் சட்ட எரிப்புப் போராட்ட வரலாற்றினை விளக்கி, கோவையில் இம்மாத இறுதியில் கழகம் நடத்தவுள்ள ஜாதி ஒழிப்புப் போராட்டத்திற்கான அவசியத்தை எடுத்துரைத்து சிறப்புரையாற்றினர். கு.அன்பு தனசேகர் (தலைமைக் குழு உறுப்பினர்), மாவட்டத் தலைவர்கள் மா. வேழ வேந்தன், சேத்துப்பட்டு இராசேந்திரன், ம. கி. எட்வின் பிரபாகரன் (மாவட்ட அமைப்பாளர்), மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப. அருண், சு. கோபிநாத் (திருவல்லிக்கேணி பகுதித் தலைவர்), சே. ராஜேஷ்(பகுதிச் செயலாளர்), த.நா. சூர்யா(பகுதி அமைப்பாளர்), ஷர்மிளா (தமிழ்நாடு மாணவர் கழகம் ஈரோடு) பிரசாந்த் (முழக்கம் செய்தியாளர்), ரெங்கநாதன் (அனைத்து ஜாதி அர்ச்சகர் சங்க தலைவர்), U2BRUTUS மைனர், கழகத் தோழர்கள் ஈரோடு கலை, இரண்யா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.*

**மேட்டூர்:** *கழகத்தின் சார்பில் ஜாதி ஒழிப்பு - சட்ட எரிப்பு போராளிகளுக்கு வீரவணக்க நாள் தெருமுனைக் கூட்டம் 26.11.2025 புதன் மாலை 5.30 மணியளவில் மேட்டூர் சின்ன பார்க் பகுதியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மார்ட்டின் (மேட்டூர் நகரத் தலைவர்) தலைமை வகித்தார். மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவின் பகுத்தறிவு பாடல்களுடன் கூட்டம் நடைபெற்றது. தலைமைக் குழு உறுப்பினர்கள் காவை ஈசுவரன், சக்திவேல் கோவிந்ததாசு (சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர்), கிருஷ்ணன் (சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்), பிரபாகரன் (சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர்) முல்லை வேந்தன் (திராவிடர் பண்பாட்டு நடுவத்தின் பொறுப்பாளர்), சிஅய்டியு இளங்கோ, கழகத் தோழர் குமரேசன் ஆகியோர் சட்ட எரிப்பு நாள் குறித்து உரையாற்றினார்கள். ஜாதி ஒழிப்பு உறுதிமொழியை மேட்டூர் தேன்மொழி கூறினார். குமரப்பா (மேட்டூர் நகரச் செயலாளர்) அவர்கள் நன்றியுரையாற்றினார். பொதுமக்கள் அனைவருக்கும் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. விசிக நகரச் செயலாளர் குட்டி (எ) சிவக்குமார் மற்றும் தோழர்கள் மாவட்ட அமைப்பாளர் அண்ணாதுரை, நங்கவள்ளி ஒன்றியச் செயலாளர் ராஜேந்திரன், ஆர். எஸ் பகுதி தலைவர் முரளி, செயலாளர் விவேக், (சேலம் மாவட்ட இளைஞரணிச் செயலாளர்) பிரபாகரன், குமரேசன் மற்றும் மேட்டூர், மேட்டூ ஆர்.எஸ், நங்கவள்ளி, காவலாண்டியூர், வனவாசி, கொங்காணபுரம் ஆகிய பகுதிகளில் இருந்து கழகத் தோழர்கள், பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.*

## தமிழீழ போர்க்களத்தில் மடிந்த மாவீரர்களுக்கு நினைவஞ்சலி!




*தெற்கு ஆஸ்திரேலியாவின் தலைநகர் அடிலெய்டு மாவீரர் நாள் தமிழ் தேசிய ஒருங்கிணைப்புக்குழு சார்பில் நவம்பர் 27 மாலை நடைபெற்றது இத்தாலி செயின்ட் ஜோசப் அரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை ராசேந்திரன் பங்கேற்று மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தி உரையாற்றினார் அவர் தனது உரையில்'போர் தான் இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் போராட்ட களம் அரசியல் நிகழ்வுகளுக்காக காத்திருக்கிறது என்றும் விடுதலைப் புலிகளின் மகத்தான தியாகங்கள் குறித்தும் தற்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் ஈழத் தமிழர் அரசியல் நிகழ்வுகள் மற்றும் ஐநாவின் செயல்பாடுகள் குறித்தும் விரிவாக உரையாற்றினார் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் நாட்டில் வாழும் மக்களுக்கு செய்ய வேண்டிய உதவிகளை வலியுறுத்தி ஸ்ரீதர் ராஜ் உரையாற்றினார் சதீஷ் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார் மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தும் பாடல்களை பாடியதோடு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.*



### கொளத்தூரில் மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது

*ஈழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு சார்பாக 27.11.2025 வியாழக்கிழமை அன்று மாலை 6 மணி அளவில் சேலம், கொளத்தூர், புலியூர் பிரிவில் உள்ள தளபதி பொன்னம்மான் நினைவு கூடத்தில் தமிழீழ விடுதலைக்கு, தம் உயிரை ஈகம் செய்த மாவீரர்களுக்கும், தமிழீழ மக்களுக்கும் வீரவணக்கம் செலுத்தினர். கழகத் தோழர். கொளத்தூர் டைகர் பாலு தலைமையேற்று வரவேற்புறையாற்றினார். புலியூர் த.சரவணன், செ.வாசு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. தமிழர் தேசிய முன்னனியைச் சார்ந்த சிவப்பிரியன், கோவை வழக்கறிஞர். சரவணன் ஆகியோர் உரையாற்றினர். நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாவீர்கள் தங்களுக்கென பல படைப் பிரிவுகளை உருவாக்கியதையும், கொளத்தூரில் புலிகள் பயிற்சி எடுத்த நிகழ்வுகள், மேற்கத்திய நாடுகள் பல சேர்ந்து ஈழத்தமிழர்களையும், விடுதலைப் போராளிகளையும் ஒடுக்கியதால் ஏற்பட்ட வரலாற்றுப் பேரிழப்புகள் பற்றியும் விளக்கினார். “நாம் நமக்கு சரி என்று பட்ட கொள்கைக்கு உறுதியாக நிற்போம்; அனைவரும் தேவையான போது குரல் கொடுப்போம்; நமக்கு அறவழிப் போராட்டங்கள் தேவைப்படுகிறது. தமிழர்கள் சிறிது காலத்திற்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனெனில் போகப்போக நம் நாட்டை என்ன செய்ய போகிறார்களோ? மத்தியில் பாஜக ஹிட்லர் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் அதற்கு எதிர்நிலை எடுக்கிறபோது, எதிராகப் போராடுகிறபோது நீங்களும் கலந்து கொள்ளுங்கள்; முடியாதோர் உங்களில் சிலரை அனுப்புங்கள், அனுப்ப முடியாதவர்கள் இந்த போராட்டங்கள் நமக்கு தேவையானவை என மற்றவர்களிடம் சொல்லுங்கள்” என்று கூறி, மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தி, ‘மலரட்டும் தமிழீழம்’ என தனது பேச்சை நிறைவு செய்தார். இந்நிகழ்ச்சியில், பாலமலைப் பகுதியைச் சேர்ந்த அருள்மொழி - பிரகாஷ் இணையரின் ஆண் குழந்தைக்கு அறிவரண் என்ற பெயரைச் சூட்டினார். இலக்கம்பட்டி குமார் நன்றியுரையாற்றினார்.*






தொடர்ச்சி 2ம் பக்கத்தில்

## தலையங்கம்

# பெண்ணுரிமைக்கான உரையாடல்கள் பெருகட்டும்!

பழம்பெரும் பாலிவுட் நடிகையும், சமாஜ்வாதி கட்சி எம்.பி.யுமான ஜெயா பச்சன் (அமிதாப் பச்சனின் மனைவி) சமீபத்தில் மும்பையில் நடைபெற்ற பெண்கள் தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில், "தனது பேத்தி நவ்யா நவேலி நந்தாவுக்கு விரைவில் 28 வயதாகப்போகிறது. அவர் திருமண வாழ்வில் ஈடுபடுவதில் எனக்கு விருப்பமில்லை. திருமணம் என்பது காலாவதியான நடைமுறை. இன்றைய தலைமுறையினருக்கு அறிவுரை கூறும் அளவுக்கு என்னுடைய வயதும் இல்லை. இப்போதைய குழந்தைகள் நம்மை விட மிகவும் புத்திசாலிகள். திருமணத்தின் சட்டப்பூர்வ அங்கீகாரம் மட்டுமே ஒரு உறவைத் தீர்மானிக்காது. வாழ்க்கையைச் சிக்கலாக்கி கொள்ளாமல், அப்படியே அனுபவித்துக் கொண்டாடுங்கள்" என்று பேசியிருக்கிறார்.

இது ஏதோ தனி நபரின் கருத்து என்ற அளவில் சுருக்கிப் பார்க்க வேண்டியதல்ல. பெண்களின் உளவியல் போக்கும் ஏற்படும் பண்பு மாற்றமாக இப்பேச்சை கருத வேண்டியுள்ளது. வளர்ந்த நாடுகளில் இந்த கருத்தாக்கம் பொதுச்சமூகமாக உளவியலாகவே மாறியிருக்கிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். குறிப்பாக, அமெரிக்காவில் 2030-ஆம் ஆண்டுக்குள் திருமணம் செய்துகொள்ளாமல், குழந்தை பெற்றுக்கொள்ளாமல் தனித்து வாழக்கூடிய பெண்கள் 50 விழுக்காடாக அதிகரித்து விடுவார்கள் என்று மோர்கன் ஸ்டான்லி ஆய்வு நிறுவனம் கணித்திருக்கிறது. படித்து, வேலைக்குச் செல்லும் இளம்பெண்களுக்கு அவர்களுடைய வாழ்வில் ஏற்றம் பெறுவதற்கு திருமணம் பெரும் தடையாக இருக்கிறது, குழந்தை பெற்றுக்கொள்வது தங்கள் வாழ்க்கையையே முடக்கிவிடுகிறது என்ற எண்ணம் அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது.

அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில் மட்டுமல்ல, கல்வியில்- வேலைவாய்ப்பில் பெண்கள் முன்னேறி வரும் பல நாடுகளிலும் இத்தகைய சிந்தனைகள் வேர்விடத் தொடங்கியிருக்கின்றன. காரணம், உலகம் முழுவதுமே குடும்ப அமைப்பு முறை என்பது ஆணாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கான ஆயுதமாகவும், குழந்தை பெற்றுக்கொண்டு பராமரிப்பது பெண்களின் முழுநேர கடமையாகவுமே இருக்கிறது. குடும்பக் கட்டமைப்புக்குள் சமத்துவம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதுதான் அனைத்து மதங்களிலும் விதியாகவே இருக்கிறது. வீட்டு வேலைகளிலும், குழந்தைகளை பராமரிப்பதிலும் ஆண்களுக்கு பங்கே இல்லாமல் இருப்பதும், குடும்ப வேலைகளை சரிசமமாகப் பிரித்துக்கொள்ள மறுப்பதும் பெண்களிடத்தில் திருமண எண்ணத்தை கைவிடச் செய்து, குடும்ப அமைப்புகளுக்குள் சிக்கிக்கொள்ளாமல் வாழ வேண்டுமென்ற சிந்தனைகளை ஏற்படுத்தி வருகிறது.

இது பெரியார் விதைத்த பெண்ணுரிமைச் சிந்தனை. 'மனித சமுதாயம் மக்களுடன் கூடி வாழுகிற சமுதாயமே தவிர ஆளுக்கொரு பெண்ணைத் தூக்கிக்கொண்டு போய் வீட்டில் பூட்டி அடைத்து வைத்துக் கொள்கிற சமுதாயமல்ல என்கிற உணர்ச்சி பெண்களுக்கு இருக்க வேண்டும்' என்ற பெரியாரின் கருத்துக்கள் இப்போது மக்கள்மயமாகி வருகின்றன என்பதன் வெளிப்பாடாகவே ஜெயா பச்சனின் கருத்தையும், மோர்கன் ஸ்டான்லி நிறுவனத்தின் ஆய்வாகவும் பார்க்க வேண்டியுள்ளது. கல்வியும் பொருளாதார தன்னிறைவும்தான் பெண்களுக்கு இந்த உரிமைச் சிந்தனையை விதைக்கத் தொடங்கியிருக்கிறது. இந்த ஆரோக்கியமான பண்பு மாற்றம் இந்தியப் பெண்களிடத்தில் முழுமையாகக் கடத்தப்பட வேண்டியது அவசியமாகிறது.

ஏனெனில் இந்தியாவில் இன்றைக்கும் திருமணம் என்பது பிறந்த வீட்டில் இருந்து பெண்களைப் பிரித்து, வேறொரு வீட்டில் இணைத்து அடிமைப்படுத்துவதற்கான நாளாகவே அடையாளம் பெறுகிறது. திருமணத்திற்காக வழக்கத்தில் இருக்கிற சடங்குகள் அனைத்தும் கொண்டாட்டமாக இருப்பதில்லை, பெண்களை மனதளவில் பலவீனப்படுத்துவதற்கான வழிமுறைகளாகவே உள்ளன. குறிப்பாக, திருமணம் ஆன பெண்கள் தாலி அணிந்துகொள்ள வேண்டுமென்பது கட்டாயம். ஒரு ஆண் எத்தனை ஒழுக்கம் கெட்டவனாக இருந்தாலும் தாலி கட்டிவிட்டால், அவனை தெய்வமாக தொழ வேண்டும் என்கிற புனிதப்பிம்பம் தாலியின் ஊடாக விதைக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய ஆண்களிடம் இருந்து விவாகரத்து பெற்றுக்கொண்டு, தாலியை கழற்றிவிடலாம் என்ற சட்ட பாதுகாப்பு இருந்தாலும் கூட, இந்திய ஜாதிய சமூக அமைப்பு அவ்வளவு எளிதாக பெண்களை விட்டுவதில்லை.

தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் 2022-ஆம் ஆண்டு தரவுகளின்படி, பெண்களுக்கு எதிரான குற்றங்களில் 31.4 விழுக்காடு 'குடும்ப வன்முறை'தான் காரணமாக இருக்கிறது. ஒரு ஆண் தாலி கட்டிவிட்டான் என்பதே இந்த குடும்ப வன்முறைகளை பெண்கள் சகித்துக்கொண்டு வாழ்வதற்கான காரணியாக இருக்கிறது. இந்த வன்முறைகளில் இருந்து விடுவித்துக்கொள்வதற்கும், கல்வி- பொருளாதாரத்தில் தங்களை வளப்படுத்திக்கொள்ளவும் குடும்ப அமைப்புகளில் இருந்து பெண்கள் வெளியேறுவது ஒன்றே எளிதான வழியாக இருக்கிறது. அந்த வழியை துணிச்சலாக வெளிப்படுத்தும் குரலாக ஜெயா பச்சனின் கருத்து வெளிப்பட்டிருக்கிறது. திருமணத்தை விட, குடும்ப அமைப்புகளை விட, மற்றெந்த புனிதக் கற்பிதங்களை விட பெண்களின் சுயமரியாதையும், தன்னிறைவான வாழ்க்கையுமே அவசியமானது. அதை அடைவதற்கான உரையாடல்கள் பெருகட்டும்!

# கொழுக்கும் கோச்சிங் செண்டர்கள்!

*'நீட்' என்பது சமமற்ற வாய்ப்பு. 'நீட்' என்பது அநீதி. ஏழைகள், கிராமப்புற மக்களுக்கு எதிரானது. சமச்சீரான கல்விமுறையை சீரழித்துவிடும். எனவே, நீட் ரத்து செய்யப்பட வேண்டும் எனத் தமிழ்நாடு போராடி வருகிறது. ஆனால் தமிழ்நாட்டின் கோரிக்கைக்கு செவிசாய்க்காத ஒன்றிய அரசு, இப்போது தகுதித் தேர்வுகளை நடத்துவதில் சீர்திருத்தம் செய்யலாமா எனத் தேர்வு முகமை ஆலோசித்து வருவதாக, செய்திகள் வெளியாகியுள்ளன. இதுதொடர்பாக டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளேட்டில் வெளியான செய்தியைப் பகிர்ந்து தனது வலைதளப்பக்கத்தில் பதிவிட்டுள்ளார் மூத்த பத்திரிகையாளர் மு.குணசேகரன்.*

*"நீட் தேர்வு பள்ளிகளின் முக்கியத்துவத்தைக் குறைத்து, கோச்சிங் நிறுவனங்களின் வணிக வேட்டைக்கு வழிவகுக்கும் என்று எச்சரித்தது தமிழ்நாடு! dummy schools அதிகரித்துவிட்டன; நாள்தோறும் 6 மணி நேரம் கோச்சிங் மையங்களில் மாணவர்கள் வதைபடுகிறார்கள் என்ற அவலம் டெல்லியை, இப்போதுதான் உறுத்தத் தொடங்கி இருக்கிறது. ப்ளஸ்-ஒன் படிக்கும்போதே நீட்டை நடத்திவிடலாமா? கோச்சிங் மையத்தில் 3 மணி நேரத்துக்கு மேல் இருக்கக் கூடாது என உத்தரவு போடலாமா? பெயரளவுக்கு பள்ளிகளில் (dummy schools) அட்டன்டன்ஸ் போட்டுவிட்டு, முழுநேரமும் கோச்சிங் சென்டரில் இருப்பதைத் தடுப்பது எப்படி? பழையபடி ப்ளஸ்-டூ மதிப்பெண்ணுக்கு மதிப்பு தரலாமா? என்றெல்லாம் வல்லுநர் குழுவை அமைத்து ஆலோசனை கேட்கத் தொடங்கி இருக்கிறது ஒன்றிய அரசு*

*'நீட்' என்பது சமமற்ற வாய்ப்பு. கோச்சிங் மையங்களில் லட்சக்கணக்கில் செலவழிக்கும் வசதியானவர்களுக்கு சாதகமானது. பள்ளிகளின் போதனை; ஆசிரியர்களின் முக்கியத்துவத்தை ஒன்றுமில்லாமல் செய்து, கல்விமுறையை சீரழித்துவிடும் என்ற தமிழ்நாட்டின் வாதம் சரியானது என்று மீண்டும் ஒரு முறை நிரூபணம் ஆகி இருக்கிறது. கோச்சிங் நேரக் கட்டுப்பாடு நடைமுறை சாத்தியமானதா? ப்ளஸ்-ஒன் படிக்கும்போதே நீட் தேர்வு நடத்துவது சுமையைக் குறைக்கும் செயலா? ப்ளஸ்-டூ மதிப்பெண் போதும்; நீட் விலக்கு தாருங்கள் என்ற தமிழ்நாட்டின் கோரிக்கையில் உள்ள நியாயத்தை இப்போதாவது ஏற்பார்களா? நீட் ஒரு சர்வரோக நிவாரணி; அருமருந்து என்று தொடர்ந்து பிடிவாதம் காண்பிக்கப் போகிறார்களா?" என கேள்வி எழுப்புகிறது அவரது பதிவு.*

# ஆர்.எஸ்.எஸ்க்காக கோயில் இடிப்பு!

*டெல்லியில் ஆர்.எஸ்.எஸ் கட்டியுள்ள புதிய தலைமையகத்தின் வாகன நிறுத்துமிட வசதிக்காக, அப்பகுதியில் இருந்த பழமையான கோயில் ஒன்று இடிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் மக்களின் பலத்த எதிர்ப்பையும் மீறி, மாநகராட்சியின் துணைகொண்டு இந்த 'கர'சேவையை நடத்தியிருக்கிறது ஆர்எஸ்எஸ். இந்துக்கள், ஆலயங்கள் என்றெல்லாம் பாஜகவும், சங் பரிவார் கும்பலும் பேசுவது வெறும் அரசியலுக்காகத்தானா என்று அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். ஆனால் நிர்வாக நடைமுறையைப் பின்பற்றித்தான் கோயில் இடிக்கப்பட்டுள்ளது இதில் எந்த விதிமீறலும் இல்லை என விளக்கம் தந்திருக்கிறது பாஜக தரப்பு. நடைபாதை கோயில்களை அகற்ற வேண்டுமென்று நீதிமன்றங்கள் எத்தனையோ முறை கூறிவிட்டன. விதிமுறைகளைப் பின்பற்றித்தான் அந்த கோயில்களையும் அதிகாரிகள் இடிக்க முயன்றனர். ஆனால் இந்துத்துவாதிகள் விட்டார்களா? ஜெய்பூரில் மெட்ரோ ரயில் திட்டத்திற்காக ஆக்கிரமிப்பு நிலத்தில் கட்டப்பட்ட கோயிலை அகற்ற ஆர்எஸ்எஸ் எதிர்ப்பு தெரிவித்தது. ஆனால் இப்போது தங்கள் தேவைக்காக கோயிலை இடித்திருக்கின்றனர். ஆர்எஸ்எஸ் அமைப்பு பக்தியைப் பரப்பும் இயக்கமல்ல, பாகுபாட்டை விதைக்கும் நஞ்சு. அதற்கு பக்தியை பகடைக்காயாக பயன்படுத்துகிறது, அந்த இயக்கம் ஆன்மீகத்திற்கானது அல்ல, பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கானது மட்டுமே என்பதை நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.*

### முதல் பக்க தொடர்ச்சி..

*நிகழ்வில் கழகப் பொருளாளர் துரைசாமி, திமுக கொளத்தூர் ஒன்றியச் செயலாளர் மிதுன் சக்கரவர்த்தி, சேலம், நாமக்கல், ஈரோடு, கோவை, திருப்பூர், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்ட கழகத் தோழர்கள், பல்வேறு அமைப்புத் தோழர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.*



**வேலூர்:** *மாவட்டக் கழகத்தின் சார்பாக 27.11.2025 மாலை 6 மணிக்கு மாவட்ட செயலாளர் சிவா அவர்களின் யாழ் இல்லத்தில் மாவீரர் நாள் அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கழகத் தோழர்கள் மற்றும் ஆதரவாளர்கள் சுமார் 50 பேர் பங்கேற்றனர்.*

**சென்னை:** *தமிழீழ மாவீரர் நாள் நினைவேந்தல் கூட்டம், நவம்பர் 27, 2025 மாலை 6 மணிக்கு, சென்னை திருவல்லிக்கேணி இருசப்பா தெருவில், பகுதிச் செயலாளர் சே.ராஜேஷ் தலைமையில், பகுதி அமைப்பாளர் த.நா. சூர்யா முன்னிலையில் நடைபெற்றது.*










*தியாகச் சுடரை தோழர் தியாகு ஏற்றி வைத்தார். மாவீரர் நாள் பாடல் ஒலிக்க, தோழர்கள் கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தி, நினைவஞ்சலி செலுத்தினர். கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், கழகத் தலைமைக்குழு உறுப்பினர் கு.அன்பு தனசேகர், விசிக திருவல்லிக்கேணி பகுதிச் செயலாளர் வெங்கடேஷ், விசிக மயிலை பகுதிச் செயலாளர் பிரபாகரன், இளஞ்சிறுத்தை எழுச்சிப் பாசறை மயிலை பகுதி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் கார்த்திக் ஆகியோர் உரையாற்றினர்.*

*வழக்கறிஞர் வடிவம்மாள், ஈழப் போராட்டத்திற்கு ஆதரவாக உண்ணாவிரதம் இருந்தவர். தனது உறவினருக்கு சிங்கள வெறியர்களால் நேர்ந்த கொடுமையை அவர் விவரித்துப் பேசினார். ததேவிஇ பொதுச் செயலாளர் தியாகு, எவ்வித ஆர்பரிப்பு உணர்ச்சிகள் இல்லாமல் விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழ்நாட்டில் உலாவிய செய்திகளையும், புலிகள் இயக்கத்தின் தியாகங்களையும் எடுத்துரைத்து, சுமார் 1.30 மணி நேரம் நிறைவுரையாற்றினார்.*

*திருவல்லிக்கேணி பகுதித் தலைவர் சு.கோபிநாத் நன்றியுரையாற்றினார். நிகழ்வில், சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, மாவட்டத் தலைவர்கள் மா.வேழவேந்தன், சேத்துப்பட்டு இராசேந்திரன், மாவட்ட அமைப்பாளர்கள் ம.கி.எட்வின் பிரபாகரன், ந. தட்சிணாமூர்த்தி, சென்னை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப. அருண், மயிலை மனோகர், வடசென்னை ராஜன், தமிழ்நாடு மாணவர் கழக சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பேரன்பு, மயிலை சிவா, முழக்கம் உமாபதி, ஷர்மிளா (தமிழ்நாடு மாணவர் கழகம்), முழக்கம் செய்தியாளர் பிரசாந்த் உள்ளிட்ட கழகத் தோழர்கள் பலர் பங்கேற்றனர்.*

# தமிழர் இயக்கத்தை முன்னெடுத்த பெரியார்!

## ஜீவாவின் பெரியார் மீதான விமர்சனம் (6)

- கொளத்தூர் மணி

*‘ஈரோட்டுப் பாதை சரியா?’ நூலில் ஜீவா அவர்கள் பெரியார் மீது வைத்துள்ள விமர்சனங்களுக்கான பதிலின் தொடர்ச்சி.*

*தமிழர் இயக்கத்தின் தொடர்ச்சியாக 22.11.1925 குடிஅரசு இதழில் ‘தமிழ் தினசரி பத்திரிக்கை’ என்ற ஒரு தலையங்கத்தை பெரியார் எழுதியுள்ளார். அதில், ‘தென்னிந்தியாவுக்கு, தென் இந்தியர்களுக்கு, ஒரு நம்பிக்கையும் யோக்கியமும் உள்ள தமிழ் தினசரி பத்திரிக்கை வேண்டுமா? வேண்டாமா? என்று யோசிக்க வேண்டும். குறைந்தது ஒரு லட்ச ரூபாய் மூலதனம் வேண்டும். ஒரு வருடத்தில் பத்தாயிரம் சந்தாக்கள் சேர வேண்டும். 50,000 இல்லாமல் ஆரம்பிப்பது நிலை பெற தக்கதாகாது. அதற்கு பங்கு ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வீதம் 20 ஆயிரம் பங்கு கொண்ட ஒரு லட்ச ரூபாய் மூலதனம் வேண்டும். 50 ஆயிரம் ரூபாய் வசூலித்த பிறகுதான் பத்திரிக்கை ஆரம்பிக்க வேண்டும். தமிழ் ஜில்லாக்களாகிய 12 ஜில்லாக்களுக்கும் ஜில்லா ஒன்றுக்கு 5000 ரூபாய் முன்பணம் வசூலிக்க வேண்டும்’ என்றெல்லாம் குறிப்பிட்டு விட்டு, “பத்திரிகையின் கொள்கை பிராமணரல்லாதாருடையவும் தீண்டாதாருடையவும் சமத்துவமும் முன்னேற்றமுமே முக்கியமாய் இருக்க வேண்டும் என்றும், ஆகையால் இதைப் பற்றி தமிழ் மக்கள் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தால் தமிழ் மக்களுக்கு ஏதாவது சுயமரியாதை உண்டாகலாம் என்று விண்ணப்பித்துக் கொள்கிறோம்” என்று தமிழர்களுக்கு ஒரு தமிழ் பத்திரிக்கை தேவை என்பதை முதன்மை இலக்காகக் கொண்ட ஒரு தலையங்கத்தை எழுதியுள்ளார்.*

### தமிழர் மாநாடு

08.11.1925 நாளிட்ட குடிஅரசு இதழில் ‘தமிழர் மாநாடு’ என்ற தலைப்பில் பெரியார் ஒரு தலையங்கத்தை எழுதியுள்ளார். அதில் சில செய்திகளை முன் வைக்கிறார். “சுயராஜ்யம் என்பது சுயமரியாதையும் சுயேச்சையும் உள்ள சமூகத்துக்குதான் பயன்படுமே அல்லாது, அது இல்லாதவர்க்கு சுயராஜ்யம் என்பதும் பர ராஜியம் என்பதும் வித்தியாசம் அற்றதே ஆகும். இந்தியாவுக்கு பிரிட்டிசார் செய்த கெடுதியை விட பிராமணர் செய்த கெடுதி குறைவானதல்லவென்று மகாத்மாவே சொல்லி இருக்கிறார். காஞ்சிபுரம் மகாநாட்டில் கூடும் பொதுஜன பிரதிநிதிகள் சுயராஜ்ஜியத்திற்கு என்றோ தேச முன்னேற்றத்திற்கென்றோ கருதி ஏமாந்து போய் மறுபடியும் இக்கூட்டத்தாரின் சூழ்ச்சிக்கு ஆளாகி அவர்கள் சொல்வதை சொல்லுகிறபடி நடந்து நமது நன்மைக்கென்று நினைத்து அவர்கள் நம்பிக்கைக்கு விட்டு கொடுத்துவிட்டு போகாமல் இருக்கும்படி நாம் எச்சரிக்கை செய்கிறோம்

ஒவ்வொருவருக்கும் ராஜிய விஷயத்திலோ மத விஷயத்திலோ தனது வாழ்வு விஷயத்திலோ ஒருவருக்கொருவர் அபிப்பிராய பேதம் உடையவர்களாக இருந்தபோதிலும், தாங்கள் எல்லோரும் பிராமணர் அல்லாதார் என்பதையும், பிராமணர்களின் சூழ்ச்சிகள் என்றும் தந்திரங்கள் என்றும் விலகி தாங்கள் சுயமரியாதையுடன் மனிதனாக வாழ வேண்டும் என்கின்ற ஒரே பொதுவான நோக்கத்தை வைத்து பாடுபடுவதற்கு ஒரு பொது இயக்கத்தை காண வேண்டியது தற்சமயம் மிகவும் அவசியமானது என்பதை பெரும்பாலோர் ஒப்புக் கொள்வார்கள். உத்தியோக விஷயங்களில் ஆகட்டும் மற்றும் தெரிந்தெடுப்பு பதவிகள் ஆகட்டும் அல்லது இதர பொது ஸ்தாபனங்களில் ஆகட்டும் அவரவர் இன்னின்ன அளவுக்கு உரியவர்கள் என்று தீர்மானம் ஏற்பட்டு போய்விட வேண்டியது அவசியம்.

பிராமணர் அல்லாத இந்துக்களுடைய வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை விட தீண்டாத சமூகத்தின் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் மிகவும் முக்கியமானது என்பதை நாம் கோபுரத்தின் மீது இருந்தும் சொல்லுவோம். ஏனெனில் அவர்கள் சமூகப் பெருக்கத்திற்கு தக்கபடி கல்வியிலோ உத்தியோகத்திலோ மற்றும் பல பொது வாழ்க்கையிலோ அவர்கள் முன்னேறவே இல்லை. இதன் காரணத்தினால் தேசத்தில் ஐந்தில் ஒரு பாகம் ஜனங்கள் தேச நலத்தை மறந்து சர்க்கார் தயவு நாடி இருக்க வேண்டியதாக உள்ளது.

சுமார் 25 வருடங்களுக்கு முன்பாகவாவது இச்சமூகங்களுக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டு இருக்குமேயானால் இன்றைய தினம் இந்தியாவில் இருக்கும் இவ்வளவு அபிப்பிராய பேதங்களும் ஒற்றுமை இன்மையும், பிரிட்டிஷார் கொடுங்கோன்மையும், பிராமணக் கொடுமையும் நமது நாட்டில் இருக்குமா? தெருவில் நடக்க கூடாத மனிதனும், கண்ணில் தென்பட கூடாத மனிதனும், அவனவன் மதத்தை அறிய கூடாத மனிதனும், அவனவன் தெய்வத்தை காணக்கூடாத மனிதனும் இந்தியாவில் இருக்கக் கூடுமா? என்பதை பொதுநோக்குடைய ஒவ்வொருவரும் யோசிக்க வேண்டுவதோடு ராஜீய மாநாட்டில் இதை வலியுறுத்தி அமலுக்கு கொண்டு வரும்படி செய்ய வேண்டியது தேசபக்தர்களின் கடமை என்பதை வணக்கத்துடன் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்” என்கிறார்.

### தமிழர் இயக்கம்

மீண்டும் 15.11.1925 நாள் இட்ட குடிஅரசு இதழில் ‘காஞ்சிபுரம் தமிழர் மாநாடுகள்’ என்ற தலைப்பில் ஒரு வேண்டுகோள் என தன்னுடைய கையொப்பத்தோடு பெரியார் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இருக்கிறார்.

“பிராமணரல்லாதார் முன்னேற்றத்தில் கரிசனம் உள்ள தமிழ்நாட்டு பிராமணரல்லாத அனைவரும் வந்திருந்து தங்களது முன்னேற்றத்திற்கான ஒரு திட்டத்தைக் காணவும் அதை சரிவர அமுலுக்குக் கொண்டு வரவும் ஏற்பாடு செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இது விஷயத்தில் ஒவ்வொருவரும் தங்கள் ராஜீய அபிப்பிராய பேதம் காரணமாகவாவது சொந்த அசவுரியம் காரணமாகவாவது அலட்சியமாய் இருந்துவிடாமல் கண்டிப்பாக வர வேண்டுமாய் மறுபடியும் வினயத்துடன் கேட்டுக்கொள்கிறேன். தீண்டாமையை ஒழிக்க வேண்டியது பிராமணரல்லாதவருக்கு மிகவும் முக்கியமானதொரு கடனாகும். ஏனெனில் தீண்டாதர்களின் முன்னேற்றம்தான் பிராமணரல்லாதாரின் முன்னேற்றமாகும். தீண்டாதார்களின் துன்பம் தான் பிராமணரல்லாதாரின் துன்பமாகும்.

தீண்டாமை ஒழிவதன் மூலமாகத்தான் பிராமணரல்லாதார் கடைத்தேற முடியும். தீண்டாமை ஒழிவதன் மூலமாய்தான் நாடு சுயராஜ்யமடையும். ஆதலால் தீண்டாமை விலக்கில் கவலை உள்ளவர்களும் தீண்டாதார் என்று சொல்லப்படுபவரும் அவசியம் காஞ்சிபுரத்திற்கு வந்து அதற்கென்று ஓர் மாநாடு கூட்டி காரியத்தில் பலன் தரத்தக்கத் திட்டங்களைக் காணவேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்” என்பதே அவ்வேண்டுகோள்

**1938 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது இந்தியின் ஆபத்தை விளக்கி பரப்புரை செய்ய சுயமரியாதை இயக்கத்தவர்களைக் கொண்டு நடத்திய இந்தி எதிர்ப்பு பரப்புரை படைக்குக் கூட ‘தமிழர் படை’ என்று தான் பெயர் சூட்டப்பட்டது. அப்படையினர் ஏந்தி சென்ற கொடி ‘தமிழ்க்கொடி’யே ஆகும்.**

இவற்றையெல்லாம் எடுத்துக்காட்டுவதற்குக் காரணம், தமிழர் கூட்டம், தமிழர் இயக்கமாகி அது பின்னர் காங்கிரஸ் கட்சியின் காஞ்சிபுரம் மாநாட்டின் போது கூட பார்ப்பனரல்லாதார் சந்திக்கிற மாநாட்டை ‘தமிழர் மாநாடு’ என்ற பெயராலும் ‘தமிழ்ப் பத்திரிக்கை’ வேண்டும் என்றும் பெரியார் குறிப்பிட்டு ‘தமிழர் இயக்கம்’ என்பதைத் தொடர்ச்சியாக எடுத்துச் சென்றிருக்கிறார் என்பதை சுட்டிக்காட்டுவதற்கு மட்டுமே ஆகும்.

அதுபோலவே 1938 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது இந்தியின் ஆபத்தை விளக்கி பரப்புரை செய்ய சுயமரியாதை இயக்கத்தவர்களைக் கொண்டு நடத்திய இந்தி எதிர்ப்பு பரப்புரை படைக்குக் கூட ‘தமிழர் படை’ என்று தான் பெயர் சூட்டப்பட்டது. அப்படையினர் ஏந்தி சென்ற கொடி ‘தமிழ்க்கொடி’யே ஆகும். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது முன்னெடுத்த இயக்கம் ‘தமிழர் இயக்கம்’ என்பதாகத்தான் அப்போதும் பெயர் சூட்டப்பட்டிருந்தது என்பதையும் இவ்வேளையில் சுட்டிக்காட்ட வேண்டும்.

தொடரும்..

# பத்ரி நாராயணன் – இயக்கமாய் ஒரு தனிமனிதன்!

**(முரசொலி பாசறைப் பக்கத்தில் ஊடகவியலாளர் பிரகாசு எழுதி வரும் பெரியார் மண் தொடரில், ராயப்பேட்டையை இலட்சியக் கோட்டையாக்கிய கழக செயல் வீரர் மறைந்த பத்ரி நாராயணனின் குறித்து எழுதப்பட்ட கட்டுரை இது)**

ஒரு தனிமனிதன் வீழ்த்தப்பட்டால் அவர்களின் உடல் இயக்கம் மட்டும்தான் நின்று போகுமே தவிர, அவர்களின் சித்தாந்தம் வீழ்ந்துவிடாது. சிந்தனையாளர்களுக்கு அவர்களின் இறப்பு என்பது ஒருகாலும் மறைவாகாது’ என்பதற்கு திராவிட இயக்கத்தில் நூற்றுக்கணக்கான உதாரணங்கள் உள்ளன. அதில் தலைநகர் சென்னையின் ஓர் உதாரணம் ‘பத்ரி நாராயணன்’. 2004-ஆம் ஆண்டு நாடாளு மன்றத் தேர்தல் களம் அனல் பறந்து கொண்டிருந்தது. ‘மதமாற்றத் தடைச்சட்டம்’, ‘ஆடு - கோழி பலியிட தடை’ என ஆர்.எஸ்.எஸ். அரசாகவே மாறியிருந்த அ.தி.மு.க.வைத் தோற்கடிக்க ஓரணியில் திரண்டிருந்தன தமிழ்நாட்டின் முற்போக்கு சக்திகள்.



சென்னையில் ஏப்ரல் 26-ஆம் தேதியில் இருந்து, தி.மு.க. கூட்டணியை ஆதரித்து தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டிருந்தது பெரியார் திராவிடர் கழகம். ஏப்ரல் 30-ஆம் நாள் காலையில் வட சென்னையில் தேர்தல் பிரச்சாரத்தில் பங்கேற்றுவிட்டு, வீடு திரும்பிய பத்ரி நாராயணன் மாலையில், வி.எம்.தெருவைச் சேர்ந்த பெரியாரிய தொண்டர் சு.பிரகாஷ்- சுமதி இணையரின் திருமண நிகழ்ச்சிக்காக மோட்டார் சைக்கிளில் புறப்பட்டார். அடுத்த தெருவான ஸ்ரீராம் நகருக்குள் நுழைந்தபோது, ஆள் நடமாட்டம் இல்லாத அந்தப் பகுதியில் வைத்து, பத்ரி நாராயணனை வெட்டிப் படுகொலை செய்தது ஒரு கும்பல். அரசியல் பிரமுகர்கள் மட்டுமில்லாமல், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சாரை சாரையாக திரண்டு கண்ணீர் மல்க பத்ரி நாராயணனின் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள வி.எம்.தெரு என்றால் பெரியார் சிலையும், அங்கு குடியிருக்கும் நூற்றுக்கணக்கான கருப்பு சட்டைக்காரர்களும்தான் இன்றைய அடையாளம். ஆனால், 30 ஆண்டுகளுக்கு முன்பு வி.எம்.தெரு என்றாலே ரவுடியிசமும், சமூக விரோதச் செயல்களும்தான் எல்லோர் நினைவுக்கும் வரும். கல்வியில் ஈடுபாடில்லாமல், போதைப்பொருள் பழக்கத்திற்கு அடிமையாகி நூற்றுக்கணக்கான இளைஞர்கள் தங்கள் வாழ்வை சீரழித்துக் கொண்டிருந்தனர். அவர்களை நல்வழிப்படுத்தி, அப்பகுதி மக்களுக்குப் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஆனால், அப்பணிvயைச் செய்ததோ பத்ரி நாராயணன் என்ற ஓர் இயக்கம். ஆம், பத்ரி நாராயணன் தனிமனிதராக அல்ல, திராவிட இயக்க சீர்திருத்தச் சிந்தனையின் இயக்கமாகத்தான் இருந்தார்.

அந்த இயக்கத்தின் மூச்சு நின்றுவிட்டதே என்ற அதிர்ச்சிதான் ஆயிரக்கணக்கானோர் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்த காரணமாக இருந்தது. மூச்சு நிற்கும், இயக்கம் நிற்குமா? கசங்கிய லுங்கி, கருப்புச் சட்டை, தாடி மறைத்த முகம் என்ற பத்ரி நாராயணனின் அடையாளம் அவர் மறைந்து 21 ஆண்டுகள் ஆகியிருந்தாலும், வி.எம்.தெரு மக்களுக்கு இன்னமும் அப்படியே நினைவில் நிற்கிறது. மயிலாப்பூர் இடுகாட்டில் உள்ள அவரது நினைவிடத்தில் ஏப்ரல் 30-ஆம் நாள், கருப்புச் சட்டை சகிதமாக இன்னமும் ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கானோர் திரண்டு அவரை எண்ணி கண்ணீர் வடிக்கின்றனர். பாகுபாடு இல்லாமல் எல்லா கட்சியினரும் இப்போதும் அஞ்சலி செலுத்த வருகிறார்கள் என்பதும் கூடுதல் ஆச்சரியம்.

தொடரும்..

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# நிமிர்வோம் வெளியீடுகளுக்கு சிறப்பான வரவேற்பு!

தி.மு.க.- 75 அறிவுத் திருவிழாவின் ஒரு பகுதியாக, நவம்பர் 8 முதல் 16 வரை வள்ளுவர் கோட்டத்தில், சென்னை முற்போக்கு புத்தகக் காட்சி நடைபெற்றது. இதில், திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் நிமிர்வோம் பதிப்பகமும் பங்கேற்க, ஊடவியலாளர் ர.பிரகாசு, தோழர் மகிழவன் முயற்சியில் அரங்கு ஒதுக்கப்பட்டது. தென்சென்னை மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன் ஒருங்கிணைப்பில், 9 நாட்கள் நிமிர்வோம் பதிப்பக அரங்கு செயல்பட்டது. கழக வெளியீடுகளுக்கு வாசகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்தது. ஒவ்வொரு நாளும் கழக வெளியீடுகளை தேடி வந்து வாங்கிச் சென்றனர். மொத்தம் ரூ.82,000-க்கு கழக நூல்கள் விற்பனையானது.







இளைஞர் அணி அமைப்பாளர் ப.அருண், திருவல்லிக்கேணி பகுதித் தலைவர் சு.கோபிநாத், பகுதி அமைப்பாளர் த.நா. சூர்யா, காவை அஜித், முழக்கம் செய்தியாளர் பிரசாந்த், சுகந்தன், வீரா, யாழினி, அசோக், ஓவியா ஆகிய தோழர்கள் அரங்க வடிவமைப்பு பணிகளை முனைப்புடன் செய்தனர்.

தாம்பரம் நகர அமைப்பாளர் அருண் கோமதி, இளைஞரணி தோழர்கள் இம்மேனுவல் துரை, பிரனேஷ், தாமரை, நந்தகுமார், புகழேந்தி, தீபக், சுரேந்தர், மடிப்பாக்கம் அருண், ஸ்ரீலேகா, சுபாஷ் ஆனந்த், கவுரி சங்கர், கழகத் தோழர் இரண்யா உள்ளிட்ட பலர் தோழர்கள் புத்தக விற்பனையில் ஈடுபட்டனர்.

நவம்பர் 9 அன்று வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற இரண்டு நாள் கருத்தரங்கில் சிறப்புரை ஆற்ற வந்த கழகத் தலைவர் கொளத்தூர் மணி, நிமிர்வோம் அரங்குக்கு வருகை புரிந்தார். தோழர் U2 BRUTUS மைனர் வீரமணி, வீடியோவை வெளியிட்டு நிமிர்வோம் அரங்குக்கு வருகை தந்து வாசகர்களை ஈர்த்தார். நவம்பர் 12-ஆம் நாள் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய "நாத்திகம்: சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகள்" நூல் வெளியீட்டு நிகழ்வு, சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி தலைமையில் நிமிர்வோம் அரங்கில் நடைபெற்றது. ஆயிரம் விளக்கு தொகுதி தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நூலை வெளியிட, மா.பெ.பொ.க.யின் துணைப் பொதுச்செயலாளர் வாலாசா வல்லவன் பெற்றுக்கொண்டார். இந்நூல் பெரும்பாலும் விற்றுத்தீர்ந்தது. அதேபோல, கழகத் தலைவர் எழுதிய "இடஒதுக்கீட்டின் நோக்கம் ஜாதி ஒழிப்பே" எனும் நூலும் பெரும் வரவேற்பைப் பெற்றது!

பொதுமக்களை ஈர்க்கும் விதமாக, ஒவ்வொரு நாளும் மாலை வேலைகளில் கலை நிகழ்ச்சிகளும் கருத்துரைகளும், புத்தகக் காட்சி நடைபெறும் கூடாரத்துக்கு அருகிலே உள்ள மேடையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில், நவம்பர் 13ஆம் நாள், கழகத்தின் பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் துரை தாமோதரனின் "மந்திரமா? தந்திரமா?" நிகழ்ச்சி நடைபெற்றது. கழக நூல்கள் நிமிர்வோம் அரங்கில் மட்டுமல்லாமல் மற்ற அரங்குகளிலும் விற்பனை செய்யப்பட்டது. முதல் நாளில் அரங்குக்கு வந்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு "ஆரியமாடலா? திராவிட மாடலா?" நூலை வழங்கி தோழர் ம.கி. எட்வின் பிரபாகரன் வரவேற்றார்.

நவம்பர் 16 அன்று அரங்குக்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், கழகப் பொதுச் செயலாளர் விடுதலை ராசேந்திரன் எழுதிய "ஆர்எஸ்எஸ் ஓர் அபாயம்", திராவிடப் பெரியார் யாருக்கு எதிரி?" ஆகிய நூல்களை தேர்ந்தெடுத்து வாங்கிச் சென்றதோடு மட்டுமல்லாமல், இந்த இரண்டு புத்தகங்களை முன்னிலைப்படுத்தும் படங்களையும் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்திருந்தார்.

திமுக தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்பி, திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் காஞ்சிபுரம் சி.வி.எம்.பி. எழிலரசன், விருகம்பாக்கம் ஏ.வி.எம்.பி. பிரபாகர் ராஜா, மாதவரம் எஸ். சுதர்சனம், தி.க. பரப்புரைச் செயலாளர் க. அருள்மொழி, கருஞ்சட்டைப் பதிப்பக இயக்குநர் பெல் ராஜன், தி.க துணைப் பொதுச் செயலாளர்கள் பிரின்ஸ் என்னாரசு பெரியார், மதிவதனி, திஇதபே துணைப் பொதுச் செயலாளர் இரா. உமா, புதுகை பூபாலன், தமிழ்ப்புலிகள் கட்சித் தலைவர் நாகை திருவள்ளுவன், விசிக மாவட்டச் செயலாளர் சாரநாத் (மைய சென்னை கிழக்கு), விசிக மாவட்டச் செயலாளர் கரிகால்வளவன் (தென்சென்னை வடக்கு), U2 BRUTUS மைனர், இந்திரகுமார் தேரடி, எழுத்தாளர்கள் வ. கீதா, வா.சி.ம.ப.த.ப. சரவண குமார், அனைத்து ஜாதி அர்ச்சகர் சங்கத் தலைவர் ரங்கநாதன், பேராசிரியர் ஜெயராமன், ஊடகவியலாளர்கள் "தமிழ்க்கேள்வி" செந்தில்வேல், மு.க.தினேசு குமார், ஜெயபிரகாஷ், காயத்ரி, எழிலரசன், JEEVA TODAY ஜீவா, "தமிழா தமிழா" ஆவுடையப்பன், கார்த்திகைச் செல்வன், இயக்குநர் கரு. பழனியப்பன், SVK ஹாஷிராமா, ஸ்ரீஜன் (BLUE NGO), TRIBES கரிகாலன், திருமுருகன் காந்தி (மே17), சிபிஎம் செயற்குழு உறுப்பினர் கனகராஜ், ஜி.செல்வா, மமக பொதுச் செயலாளர் ப.அப்துல் சமது, இளந்தமிழகம் செந்தில், சமூக ஊடகவியலாளர்கள் ஞான சத்யா, கலை, பாட்டர், ரௌத்திரா, கடலூர் அமீன் (மமக), நடிகர் ஆதவன் உள்ளிட்ட பல தோழமைகள் நம்முடைய அரங்குக்கு வருகை புரிந்தனர். ஆர்வத்துடன் நூல்களையும் வாங்கிச் சென்றனர்.

கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக் குழு உறுப்பினர் கு.அன்பு தனசேகர், சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, தலைமைக் குழு உறுப்பினர் இளையராஜா, மாவட்டத் தலைவர்கள் மா.வேழ வேந்தன், சேத்துப்பட்டு இராசேந்திரன், கழக தோழர் ஏசு குமார், வடசென்னை மாவட்ட அமைப்பாளர் ந. தட்சிணாமூர்த்தி, நிமிர்வோம் வாசகர் வட்ட அமைப்பாளர் ர.பிரகாசு, தென்சென்னை மாவட்டத் துணைச்செயலாளர் இராவணன், திருவல்லிக்கேணி பகுதிச் செயலாளர் சே. ராஜேஷ், தமிழ்நாடு மாணவர் கழக பொறுப்பாளர்கள் பேரன்பு (ஒருங்கிணைப்பாளர்), ஷர்மிளா, இளவரசன் (அமைப்பாளர்) ஆகியோர் அவ்வப்போது அரங்குக்கு வருகை தந்து புத்தக விற்பனையில் ஈடுபட்டிருந்த தோழர்களை ஊக்கப்படுத்தினர்.

அனைத்து மாவட்டங்களிலும் இத்தகைய முற்போக்கு புத்தகக் காட்சிகளை நடத்த வேண்டும் என்றும், அரங்குகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்றும், கூடுதலாக பொதுமக்கள் பங்கேற்பதற்கு பல்வேறு விளம்பர யுக்திகளை கையாள வேண்டும் என்றும், 9 நாட்கள் என்பதை நீட்டித்து 15 நாட்களாவது முற்போக்கு புத்தகக் காட்சியை நடத்த வேண்டும் என்றும், விழா ஏற்பாட்டாளர்களிடம் நிமிர்வோம் பதிப்பகம் சார்பில், எழுத்து வடிவில் கோரிக்கை வைக்கப்பட்டது. புத்தகக் காட்சியை ஏற்பாடு செய்த முத்தமிழறிஞர் பதிப்பகத்தையும் திமுக இளைஞரணியையும் பதிப்பாளர்கள் வெகுவாகப் பாராட்டியதை பார்க்க முடிந்தது. விருந்தோம்பல் என்ற சொல்லுக்கு எடுத்துக்காட்டாக பதிப்பாளர்களை உபசரித்தனர். புத்தகப் பதிப்பாளர்கள் சங்கம் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் நடத்தும் சென்னை புத்தகக் காட்சிக்கு ஒரு முன்னோட்டமாக இந்த முற்போக்கு புத்தகக் காட்சி சிறப்பாக நடந்து முடிந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, கழகத்தின் நிமிர்வோம் பதிப்பகம், சென்னை புத்தகக் காட்சியில் கால்பதிக்கும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

செய்தி - ம.கி. எட்வின் பிரபாகரன்

## வாசகர் கடிதம்

இதழ் தாங்கி வரும் கருத்துக்கள் மிகவும் சிறப்பானவை. வாசிப்பவர்களை பிரமிக்க வைக்கிறது. இந்த அளவுக்கு யாரும் இவ்வளவு விவரமாக யாரும் வாரப் பத்திரிகையில் எழுதவில்லை. எந்தவிதமான சினிமா விளம்பரங்கள் இல்லாமல், புரட்சிப் பெரியார் செய்திகள் மட்டுமே வெளிவருகிறது. தொடரட்டும் தங்கள் பணி வாழ்க!

எஸ்.இராமுபிள்ளை
நூலகம், சமூகநலம் வானொலியாளர், பெரம்பலூர்.

## கழக ஏட்டுக்கு தோழர் இரண்யா மாதந்தோறும் ரூ.2000 நன்கொடை

கழகத் தோழர் இரண்யா சென்னை மாவட்டக் கலந்துரையாடல் கூட்டத்தில் பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக மாதம் ரூ.2000 கொடுப்பதாக தெரிவித்தார். டிசம்பர் மாத வளர்ச்சி நிதியாக ரூ.2000 தந்துள்ளார்.

சென்னை மாவட்டக் கழக தோழர் அன்பரசு முதல் கட்ட முழக்க சந்தாவாக ரூ.1000 மாவட்டச் செயலாளர் உமாபதியிடம் வழங்கினார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

-ஆசிரியர்

## ஆணவப் படுகொலைகளுக்கு எதிரான தெருமுனைப் பிரச்சாரம்!

### கொட்டும் மழையிலும் கொள்கைப் பரப்புரை!

**சேலம்:** மாவட்டக் கழகத்தின் சார்பில் 'மனிதம் நமது அடையாளம் -ஜாதி நமக்கு அவமானம்' என்ற முழக்கங்களோடு ஆணவப் படுகொலைகளுக்கு எதிரான சமத்துவப் பரப்புரை தெருமுனைக் கூட்டம் 29.11.2025 காலை 11.00 மணிக்கு தொடங்கி இரவு 7 மணி வரை நடைபெற்றது. சமுத்திரமம், மூலப்பாதை, கொங்கணாபுரம் பேருந்து நிலையம், எட்டிக்குட்டைமேடு ஆகிய நான்கு இடங்களில் பரப்புரை நடைபெற்றது.

கிருஷ்ணன் (சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்), கவியரசு(தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர்), கொங்கணாபுரம் கோகுல் ஆகியோர் தலைமை வகித்தனர்.

தங்கதுரை (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்), சந்திரசேகரன் (நங்கவள்ளி நகரச் செயலாளர்), முன்னிலை வகித்தனர். பிரபாகரன் (சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர்) வரவேற்புரையாற்றினார்.

இளம்பிள்ளை நகரச் செயலாளர் மோகன்ராஜ், குமரசேன், கே.ஆர்.தோப்பூர் கண்ணன் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள். தங்கதுரை (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்), கோகுல் ஆகியோர் நன்றியுரை ஆற்றினர். பொதுமக்களுக்கு துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. எடிசன் அனைவருக்கும் தேநீர் வழங்கினார்.



இளம்பிள்ளை சேகர், கொளத்தூர் கணேசன், தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர், நாகராஜ், மேச்சேரி சபரி, கபிலன், இளம்பிள்ளை நகரச் செயலாளர் மோகன்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புரட்சிப் பெரியார் முழக்கம்

ஆண்டு சந்தா ரூ.300/- | ஐந்தாண்டு சந்தா ரூ.1500/-

தொடர்புக்கு: 15. தோழமை, வெங்கடேஸ்வரா நகர், பெருங்குடி, சென்னை 600096. | பேச: 63697 76351

முழக்கம் தொடர்பான சந்தேகங்களுக்கு மேற்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.

மின்னஞ்சல்: newsdvk@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : December 05, 2025

Owned and Published by : k. Rajendran, No 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041.
and Printed by : S. Theesmas, at Lilly Soosai Offset, New no.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor ; k. Rajendran